

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (12.8.2023) தலைமைச் செயலகத்தில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைச் செயலாளர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டை போக்கும் வகையில் கடந்தாண்டு அறிமுகப்படுத்தப்பட்ட "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் மூலம் பயன்பெற்ற மூன்று குழந்தைகளின் பெற்றோர்களையும், இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளின் வளர்ச்சியை கண்டறிவதற்கான சிறப்பு மருத்துவ முகாம்களின் போது இருதயத்தில் பாதிப்பு கண்டறியப்பட்டு, அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட இரண்டு குழந்தைகளின் பெற்றோர்களையும் நேற்று (12.8.2023) தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். அப்போது, அக்குழந்தைகளின் உடல்நலம் குறித்தும், இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட குழந்தைகளின் சிகிச்சை குறித்த விவரங்களையும் கேட்டறிந்து, சத்துப் பெட்டகம் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களை வழங்கினார். இந்த நிகழ்வின்போது, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் முனைவர் ஜெ.யு. சந்திரகலா ஆகியோர் உடனிருந்தனர்.

### ஆறு கிராம ஊராட்சிகளுக்கு தலா ரூ.15 இலட்சம் – கேடயம்!

# மாநில அளவிலான சிறந்த சுகாதாரச் செயல்பாடுகளுக்கான 'முன்மாதிரி கிராம விருதுகள்'!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.13–

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (12.8.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 2021-22 மற்றும் 2022-23ஆம் ஆண்டுகளுக்கான மாநில அளவிலான சிறந்த சுகாதார செயல்பாடுகளுக்கான முன்மாதிரி கிராம விருதிற்கு தேர்வு செய்யப்பட்ட குளூர், நி.பஞ்சம்பட்டி, நட்டாத்தி, நாயக்கன்பாளையம், மேல்மருவத்தூர் மற்றும் அரியனேந்தல் ஆகிய ஆறு கிராம ஊராட்சிகளுக்கு பரிசுத் தொகையாக தலா 15 இலட்சம் ரூபாயும் கேடயமும் வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:-

2021-22ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையில், சுகாதாரத்தில் சிறப்பாக செயல்படும் கிராம ஊராட்சிகளை ஊக்குவிக்கும் வகையில், "முன்மாதிரி கிராம விருது" தோற்றுவிக்கப்பட்டு, மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி என்ற அடிப்படையில், 37 கிராம ஊராட்சிகளுக்கு "முன்மாதிரி கிராம விருது" வழங்கி கௌரவிக்கப்படுவதுடன், இவ்விருதிற்கான கேடயமும், தலா 7.5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்படும் என்றும், மாவட்ட அளவிலான விருதுகளுடன், சிறப்பாக செயல்படும் மூன்று ஊராட்சிகளுக்கு மாநில அளவில் "முன்மாதிரி கிராம விருது" வழங்கி அதற்கான கேடயமும், தலா 15 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, 2021-22ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்த சுகாதார செயல்பாடுகளுக்கான முன்மாதிரி கிராம விருதுகளுக்கு ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குளூர் கிராம ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நி.பஞ்சம்பட்டி கிராம ஊராட்சி மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நட்டாத்தி கிராம ஊராட்சி ஆகிய மூன்று கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2022-23ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்த சுகாதார செயல்பாடுகளுக்கான முன்மாதிரி கிராம விருதுகளுக்கு கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நாயக்கன்பாளையம் கிராம ஊராட்சி, செங்கல்பட்டு மாவட்டம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேல்மருவத்தூர் கிராம ஊராட்சி மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரியனேந்தல் கிராம ஊராட்சி ஆகிய மூன்று கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆறு கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு மாநில அளவிலான முன்மாதிரி கிராம விருதுகளும், பரிசுத் தொகையாக தலா 15 இலட்சம் ரூபாய் மற்றும் கேடயமும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா. பொன்னையா, கூடுதல் இயக்குநர் எம்.எஸ். பிரசாந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் வீடு புகுந்து சக மாணவர்களால் ஆயுதம் கொண்டு தாக்கியதில் படுகாயம் ஏற்பட்டு பள்ளி மாணவன் மற்றும் அவரது சகோதரி ஆகியோர் நெல்லை அரசு மருத்துவ கல்லூரி பல்நோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களை சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் சென்று பார்த்து ஆறுதல் கூறினர். அப்போது அவர்களது குடும்பத்தினரிடம் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தி.மு.க. சார்பில் ரூபாய் 2 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது. அப்போது நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., ரூபி மனோகரன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகர செயலாளர் சுப்பிரமணியன், மேயர் சரவணன், முன்னாள் எம்.எல்.ஏ. மாலைராஜா, மருத்துவக் கல்லூரி டீன் ரேவதி பாலன் உள்பட பலர் இருந்தனர்.

### குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் வகையில்,

# 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டம்!

## பயன்பெற்ற குழந்தைகளின் பெற்றோர்களிடம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலம் விசாரித்தறிந்தார்!

சென்னை, ஆக.13–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (12.8.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் வகையில் "ஏற்றமிகு ஏழு திட்டங்கள் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட "ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற வருண் (வயது 4), நுசாய்பா (வயது 2) மற்றும் சாய்திரன் (வயது 2 1/2 வயது) ஆகிய குழந்தைகளின் பெற்றோர்களிடம் அக்குழந்தைகளின் உடல்நலம் குறித்து விசாரித்தறிந்தார்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்டறிவதற்கான சிறப்பு மருத்துவ முகாம்களின் போது இருதயத்தில் பாதிப்பு கண்டறியப்பட்டு, அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட ஹர்ஷித் (வயது 2) மற்றும் தேஜாஸ்ரீ (2 வயது 8 மாதம்) ஆகிய குழந்தைகளின் பெற்றோர்களிடம் அக்குழந்தைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட இருதய அறுவை சிகிச்சை குறித்த விவரங்களைக் கேட்டறிந்து, நலம் விசாரித்தார். அப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அக்குழந்தைகளின் பெற்றோர்களிடம் சத்துப் பெட்டகம் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களை வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு:–

ஆரோக்கியமான குழந்தைகளே, நாட்டின் வளமான எதிர்காலம் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7.05.2022 அன்று சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நலமுடன் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், மாநில அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்ய இருக்கிறோம் என்றும், மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் ஒன்றும் செயல்படுத்திட அரசு முடிவெடுத்துள்ளது என்றும் அறிவித்தார்.

இத்திட்டமானது, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மற்றும் சுகாதாரத்துறை ஒன்றிணைந்து, 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள் மற்றும் ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகள் ஆகியோரைப் பிரித்தறிந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டத்தின் கீழ், குழந்தைகளின் வளர்ச்சியை கண்டறிவதற்கான சிறப்பு மருத்துவ முகாமை நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டா ஊராட்சி முத்தோரை குழந்தைகள் மையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.5.2022 அன்று தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ், 6 வயது வரையுள்ள மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 9.3 இலட்சம் குழந்தைகள் RBSK குழுவினரால் மருத்துவ பரிசோதனை செய்ய ப்பட்டார்கள். அதில் 43,200 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை உட்பட வெவ்வேறு மருத்துவச் சிகிச்சைகள் மாவட்ட ஆரம்ப சிகிச்சை மையங்களில் அளிக்கப்பட்டது.

6 மாதம் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு உண்பதற்கு தயாராக உள்ள சிகிச்சை உணவு (Ready to Use Therapeutic Food RUTF) 8 வாரங்களுக்கு அளிக்க ரூபாய் 18.68 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. அதேபோன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையினால் ஊட்டச்சத்து குறைபாடுடைய 6 மாதக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூபாய் 8.68 கோடி செலவில் சத்துப் பெட்டகம் (Nutri Kit) வழங்கவும் ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தை சென்னை, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கத்தில் 28.2.2023 அன்று நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏற்றமிகு ஏழு திட்டங்களின் கீழ், ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு சிறப்பு ஊட்டச்சத்துப் பெட்டகங்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

6 மாதம் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 92,015 குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை உணவு அளிக்கப்பட்டதில் 61,788 (66.6%) குழந்தைகள் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். அதேபோன்று 6 மாதக் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 14,901 குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்கள் பிறப்பு கூடுதல் சத்து உட்கொண்டதினால் 13,319 (89.4%) குழந்தைகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

அனைத்துக் குழந்தைகளின் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் வளர்ச்சியில் முன்னேற்றத்தினைக் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் குழந்தையின் வளர்ச்சியில் குறிப்பாக முதல் 6 மாதத்தில் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றி மிகுந்த விழிப்புணர்வினை உருவாக்கியுள்ளது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் பிறவியிலேயே கண்டறியப்பட்ட இருதய நோய், பிறவியிலேயே கண்டறியப்பட்ட மூளை வளர்ச்சிக் குறைபாடு, பிறவி பார்வைக் குறைபாடு, பிறவி காது கேளாமை, பிறவி கால் ஊனம் போன்ற பிறவி குறைபாடுகளை உடைய 3038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தற்பொழுது அவர்கள் நலமாக உள்ளனர்.

இந்த நிகழ்வின்போது, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்குனர் மற்றும் குழும இயக்குனர் முனைவர். ஜெ.யு சந்திரகலா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மழைநீர் வடிகால் துறை**

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/2613/2023

**இரு உறை குறுகிய கால முறையில்**
**மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

| வ. எண் | கோப்பு எண் மற்றும் பணியின் விவரம் | பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை | ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | மண்டலம் - 12, கோட்டம் - 158ல் உள்ள கணபதிபுரம் காலனி 1வது தெரு, 4வது தெரு, உட்கிரீக் கண்ட்ரி 1வது பிரதான சாலை, 4வது குறுக்குத் தெரு, 2வது பிரதான சாலை மற்றும் 15வது குறுக்குத் தெருவில் 1500 x 1500 எம்.எம் அளவு மற்றும் அண்ணா பிரதான சாலையில் 900 x 900 எம்.எம் புதிய மழைநீர் வடிகால் கட்டும் பணி | ரூ. 635.03 | பணியின் அலுவலக மதிப்பில் 1% | வகுப்பு - 1 |

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் **22.08.2023 மாலை 3.00 மணி**
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் **https://tntenders.gov.in**
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் **23.08.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 4476 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், விழுப்புரம்**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.27/2023-2024/தவஅ/நாள்-09.08.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், **திட்டம் சாராப் பணிகள் 2023–24–ன் கீழ் விழுப்புரம், விருத்தாசலம் மற்றும் அரியலூர் (நெ) க(ம)ப கோட்டங்களில் முறையே (VPM-105–106, 107–108 & 109) ஐந்து** பணிகளுக்கு இணையவழியில் ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **08.09.2023, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரங்கள், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **21.08.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4445/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க(ம)ப வட்டம், விழுப்புரம்**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# எஸ்பி. சற்குணபாண்டியன்

## ஆகஸ்ட் 13 (2016)

'மாணவி சற்குணம்' என்ற பெயரில் கழக மேடைகளில் பேசி வந்த சற்குணபாண்டியன் சிறுமியாக இருந்தபோதே, கழகக் கொள்கைகளை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டவர். இவரது தந்தை பழம் பெரும் சுயமரியாதைக்காரரான பொன்னுசாமி அவர்களால் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டப்பட்டு, திராவிட இயக்கத்தின் தீபமாய், மாதர்குல திலகமாய் விளங்கியவர்.



"சொல்லின் செல்வி" என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட இவர், மாணவரணி, மகளிர் அணி, வடசென்னை மாணவரணி, சென்னை மாவட்ட மகளிர் அணி, மாநில மகளிர் அணியின் செயலாளர் என்று படிப்படியாகப் பொறுப்பேற்று, கழக துணைப் பொதுச்செயலாளராக பொறுப்பு வகித்தார்.

1971இல் சென்னை மாநகராட்சிக்கு நியமன உறுப்பினராகவும் – 1989, 1996 ஆகிய இரண்டு முறை சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 1996ல் தலைவர் கலைஞர் அவர்கள் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்தார்.

மதுரை, திருச்சி, சென்னை ஆகிய இடங்களில் மண்டல மகளிர் மாநாடு நடத்தி ஒன்றிய, நகர மகளிர் அமைப்புகளை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

17.9.1988 அன்று சென்னையில் நடைபெற்ற தேசிய முன்னணி ஊர்வல அணிவகுப்பில் பல்லாயிரக்கணக்கான மகளிரைப் பங்கேற்கச் செய்து ஊர்வலத்திற்கு சிறப்பு சேர்த்ததன் காரணமாக சென்னை கடற்கரையில் நடைபெற்ற தேசிய முன்னணித் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் திருக்கரத்தால் தங்கச் சங்கிலி பரிசு பெற்றவர்.

திருச்செந்தூர் நீதிகேட்டு நெடும்பயணத்தில் தலைவர் கலைஞருடன் பயணம் மேற்கொண்டவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் மகளிர் படை திரட்டி அதற்குத் தலைமை தாங்கி சிறை சென்றவர்.

இளம் பிராயத்திலிருந்து இவருக்கு இயக்கத்திலிருந்த ஆர்வத்தையும், தியாகத்தையும், பேச்சாற்றலையும் பாராட்டும் வகையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் (1990) தலைமைக் கழகத்தின் சார்பில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**